சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.113/2023</u>

09.01.2026

வா.சா.1 திருமதி.பிரபாவதி, க/பெ. ஜீவா

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் பிராதில் சொல்லியுள்ள முகவரியில்தான் எனது கணவரும் எனது மாமனாரும் கூட்டுக்குடும்பமாக வசித்து வருகிறோம் என்றால் இல்லை, நாங்கள் தனியாக வசித்து வருகிறோம். எனது மாமனாரும் கதவு எண்.7 பிள்ளையார்கோவில் தெரு முகவரியில் வசித்து வருகிறாரா என்றால் ஆமாம். அவர் ஒரு பகுதியிலும் நாங்கள் ஒரு பகுதியிலும் வசித்து வருகிறோம். பிரதிவாதி மகேஷ்வரி சேங்கனூர் கிராமத்தில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதியின் கணவரும் சேங்கனூர் கிராமத்தில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். பிராதிலும் முதல்விசாரணை வாக்குமூலத்திலும் நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். விவசாயம் செய்து வருகிறேன். நான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததாக சொல்லும் தொகையை ஈட்டக்கூடிய வகையில் எனக்கு தகுதியில்லை என்றால் சரியல்ல. நான் விவசாயம் மூலமாக வருமானம் பெறுகிறேன். மேலும் என் கணவர் வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்புவார். இந்த விவரத்தை பிராதிலும் நிரூபணவாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி எந்த நேரத்தில் எங்கு வைத்து பணம் வாங்கினார் என்று பிராதில் சொல்லவிலை என்றால் சரியல்ல. புரோநோட்டை யார் பூர்த்தி செய்தார்கள் என்றால் மகேஷவரி அழைத்து வந்த மகாதேவன் என்பவர் பூர்த்தி செய்தார். புரோநோட்டில் உள்ள ரெவன்யூ ஸ்டாம்பையும் மகேஷ்வரிதான் வாங்கிவந்தார் மேற்சொன்ன விவரத்தை பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் புரோ நோட்டை மகாதேவன் பூர்த்தி செய்யவில்லை என்றாலும், நான் எனக்கு வேண்டியவரை வைத்து பூர்த்தி செய்துக்கொண்டேன் என்றாலும் சரியல்ல. ரூ.20,000/-க்கு மேல் பணம் கொடுத்தால் வங்கி மூலம் பரிவர்த்தனை செய்யவேண்டும் என்றாலும் அவ்வாறு செய்யாமல் பிரதிவாதிக்கு பணம் கொடுத்ததாக சொல்வது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. நான் எனது வங்கி கணக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கு கடன் கொடுத்த தொகையை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி என்ன தொழில் செய்துவருகிறார் என்று பிராதில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி ஊராட்சி ஒன்றிய தலைவர் என்ற முறையில் என்னிடம் கடன் வாங்கினார். பிரதிவாதி 25.02.2023 அன்று எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் பிராதில்

சொல்லியுள்ளவாறு என்னிடம் கடன் வாங்கவில்லை என பிரதிவாதி மறுத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் பிரதிவாதியின் கணவர் என்னிடம் ரூ.1,00,000/- கடன் வாங்கியிருப்பதாகவும் அந்த கடனை பிரதிவாதியை மிரட்டி செக்யூரிடிக்காக எழுதப்படாத தாளில் பிரதிவாதியிடம் கையொப்பம் வாங்கினேன் என்றும் சொல்லியுள்ளார் என்றால் அப்படிதான் சொல்லியுள்ளார் ஆனால் அது பொய். பிரதிவாதியிடம் எழுதப்படாத தாளில் கையொப்பம் வாங்கி அதனை பயன்படுத்தி தாவா புரோநோட்டை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் வாங்கிய ரூ.1,00,000/- கடனிற்கு ரூ.60,000/- திரும்ப செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. கெம்புராஜிடம் பணம் வாங்கி கொண்டு எனது மாமானார் மூலமாக கெம்புராஜ் மீது வேறு ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன விவரங்களை பிரதிவாதி சொல்லியுள்ளபோது முதல்விசாரணையில் நான் முற்றிலுமாக மறுக்கவில்லை என்றால் சரியல்ல. நானும் எனது கணவரும் சேர்ந்து பிரதிவாதி மற்றும் அவரின் கணவருக்கு எதிராக பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதி 23.01.2019 அன்றுதான் என்னிடம் பணம் வாங்கி கொண்டு கையொப்பம் செய்து கொடுத்த ஆவணத்தை வைத்து இந்த வழக்கை காலம் கடந்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியும் அவரின் கணவர் எழுதிக்கொடுத்த ஆவணங்கள் இரண்டும் என்னிடம் இருந்தது என்றாலும் பிரதிவாதி எழுதிக்கொடுத்த ஆவணத்தை வைத்து எனது மாமனார் மூலம் வேறு ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. பிராதில் சொல்லியுள்ளவாறு பிரதிவாதி என்னிடம் ரூ.2,00,000/- கடன் பெறவில்லை என்றாலும் வட்டி சேர்த்து கொடுப்பதாக சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. தாவா கடனுறுதிசீட்டிற்கு மறுபயன் இல்லாமல் தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி பஞ்சாயத்து தலைவர் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி விவசாயம் செய்துவருகிறார் என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை என்றாலும் சரியல்ல. தாவா தொகையும் பின்வட்டியும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனவே தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.